# மூத்தோருக்கு ஆதரவளித்தல்



## துடிப்புடன் மூப்படைவதற்கு ஆற்றலளித்தல்

- துடிப்புடன் மூப்படைதல் நிலையங்களை விரிவுபடுத்துதல், இல்லங்களிலும் போக்குவரத்து உள்கட்டமைப்புகளிலும் மூத்தோருக்கு மேலும் உகந்த சாதனங்களை அறிமுகப்படுத்துதல் உள்ளிட்ட வழிகளில் மூத்தோர் இல்லங்களிலும் சமூகங்களிலும் துடிப்புடன் செயல்பட ஆதரவளிக்கும் ‘**நலமாக மூப்படைதல்’ எஸ்ஜி செயல்திட்டத்துக்கு $3.5 பில்லியன்**

## சுகாதாரப் பராமரிப்புக்கான உத்தரவாதம்

- 1974 முதல் 2003 வரை பிறந்த அனைத்து சிங்கப்பூரர்களுக்கும் ஒரு முறை மட்டுமே வழங்கப்படும் **$300** வரையிலான **மெடிசேவ் போனஸ்** (1973 அல்லது அதற்கு முன்பாகப் பிறந்த சிங்கப்பூரர்கள் மாஜூலா தொகுப்புத்திட்டத்தில் உள்ள மெடிசேவ் போனஸ்மூலம் பயனடைவர்)
- **சுகாதாரப் பராமரிப்பு, அதுசார்ந்த சமூக ஆதரவு நிதியுதவித் திட்டங்கள்** ஆகியவற்றுக்கான தனிநபர் மாதாந்தரக் குடும்ப வருமான வரம்பு உயர்த்தப்படுதல்

## ஓய்வுக்காலத் தேவைகளுக்கு ஆதரவளித்தல்

- ஓய்வுக்காலத்திற்கும் சுகாதாரப் பராமரிப்புத் தேவைகளுக்கும் ஆதரவளிக்க, 1973க்கும் முன்னர் பிறந்த 1.6 மில்லியன் சிங்கப்பூரர்களுக்கு **மாஜூலா தொகுப்புத்திட்டம்**
- **மூத்தோர் ஆதரவுத் திட்டத்தின்** காலாண்டு வழங்குதொகைகள் **20%** உயர்த்தப்படுவதோடு, தகுதிபெறும் தனிநபர் குடும்ப வருமான வரம்பும் **$2,300க்கு** உயர்த்தப்படுதல்
- 55 வயதுக்கும் மேற்பட்ட சிங்கப்பூரர்களை உள்ளடக்கும்படி ஓய்வுக்காலக் கணக்கில் **வெள்ளிக்கு வெள்ளி அடிப்படையிலான சேமிப்புத் திட்டத்தை** விரிவுபடுத்துவதோடு, அதற்கான வருடாந்தர, வாழ்நாள் உச்சவரம்பு **$2,000**, $20,000 என முறையே உயர்த்தப்படுதல்



- **மத்திய சேமநிதியின் மேம்படுத்தப்பட்ட ஓய்வுக்காலத் தொகை, அடிப்படைத் தொகையைவிட 4 மடங்கு** உயர்த்தப்படுதல்
- தகுதிபெற்ற 65 வயதுக்கும் மேற்பட்ட பணி ஓய்வுபெற்றோருக்குக் குடியிருப்புச் சொத்து வரிக் கட்டணத்துக்கான **வட்டியில்லா தவணைத் திட்டத்தை (GIRO) 24 மாதங்களுக்கு** நீட்டித்தல்

உங்களுக்கு எவ்வளவு ஆதரவு கிடைக்கக்கூடும் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்

go.gov.sg/sfyb2024

BUDGET 2024

MOF MINISTRY OF FINANCE SINGAPORE

16 பிப்ரவரி 2024 நிலவரப்படி